[1973 மார்ச் 22]

*468 வினா.—திரு கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பென்னலூர்ப்பேட்டைத் துணை வட்டம், ஆமிதாநல்லூர் அரிசன காலனி மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதில் மேலும் ஏற்படும் காலதாமதங்களுக்குக் காரணங்கள் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: செங்கை மாவட்டம், பென்னலூர்ப்பேட்டை துணை வட்டம், ஆமிதாநல்லூர் கிராம அரிஜனங்களுக்கு வீட்டு மனைகளுக்கான பட்டாக்கள் 19—12—72 அன்று வழங்கப் பட்டு விட்டன.

திரு கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, நன்றி.

குடியிருப்பு அனுபோகதாரர்கள் சட்டம்.

*469 வினா.—திரு சு. துரைசாமி:
திருமதி: த.ந. அனந்தநாயகி: } மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை குடியிருப்பு மனைச் சட்டத்தை தமிழ்நாடு முழுவதற்கும் நீட்டிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: அ & இ: ஆம். தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமைஉறுதி செய்தல்) சட்டத்தை செங்கற்பட்டு, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, சேலம் (ஏர்காடு துணை வட்டம் நீங்கலாக) இராமநாதபுரம் (இராஜபாளையம் துணை வட்டம் நீங்கலாக ஏழு மாவட்டங்களுக்கு 20—12—1972 முதல் நீட்டிக்கப் பட்டுள்ளது. நகராட்சி மன்றங்கள், நகர பஞ்சாயத்துக்கள், நகரியங்கள் மேற்படி சட்டத்தில் இருந்து விலக்களிக்கப்பட்டிருக்கின்றன. 26-2-73 அன்று நிதி நிலை அறிக்கையின்போது முதல் அமைச்சர் அறிவித்தபடி மேற்கண்ட சட்டத்தை மலைத்தோட்டங்கள், நகரியங்கள், நகராட்சி மன்றங்கள், நகர் பஞ்சாயத்துக்கள் நீங்கலாக இதர மாவட்டங்களுக்கும் நீடிப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் உத்திரவு பிறப்பிக்க படும்.

(திரு நா. வீராசாமி—தலைமை)

திரு சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை நீட்டிக்கிற காலத்தில் பஞ்சாயத்துக்களுக்கும் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதால், சின்ன கிராமங்களும் நகரப்பஞ்சாயத்தாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த இடங்களில் குடி இருக்கும் குடியிருப்புதாரர்களுக்கு அந்த சலுகை கிடைக்காமல் போய் விடுகிறது. நகரப்பஞ்சாயத்துக்கும் அந்த சலுகை தரும் வகையில் சட்டத்தைத் திருத்த வகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : சட்டத்தைத் திருத்தவேண்டியது இல்லை. சட்டத்தை நீடிக்க வேண்டியிருக்கிறது. நான் முதலில் சொன்ன அந்த மாவட்டங்களுக்கு நீட்டித்து இருக்கிறோம். பிறகு நகரப் பஞ்சாயத்துக்களுக்கு நீட்டிப்பதைப்பற்றிப் பேசலாம்.

திரு வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இதுவரையில் இந்தச் சட்டத்தால் பலன் அடைந்தவர்கள் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அமைச்சர் அறிவிப்பார்களா ? மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிப்பதில் உள்ள சந்தேகம் என்ன ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் முழுமையாக விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை 1,57,265 பேர்களாகும். மற்ற மாவட்டங்களில் எவ்வளவு பேர் பயன் அடைந்திருக்கிறார்கள் என்ற புள்ளி விவரம் இல்லை. மற்ற பகுதிகளில் மலைப்பிரதேசங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. பிளான்டேஷன் தொழிலாளர்களுக்காக கட்டப்பட்டிருக்கும் வீடுகள், மத்திய அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு கட்டியிருக்கும் வீடுகள் இருக்கின்றன.இதிலே சட்டச் சிக்கல் இருப்பதால் மலைப் பகுதிகளில் விஸ்தரிப்பதற்கு கொஞ்சம் யோசிக்கவேண்டியிருக்கிறது.

திரு எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்தக் குடியிருப்பு மனைப் பட்டா கொடுப்பது அரிசன மக்களுக்கு மட்டும்தானா அல்லது எல்லா வகுப்பினருக்கும் பட்டா செய்து தரப்படுமா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்த விவசாயத் தொழிலாளர்கள் எங்கே இருந்தாலும் அவர்கள் யாராக இருந்தாலும் ஜாதி, மத, பேதமின்றி பட்டா செய்து கொடுக்கப்படும்.

திரு எம். சுரேந்திரன் : சார், இந்தக் குடியிருப்பு மனைச்சட்டம் குடியிருந்து கொண்டிருப்பவர்களுக்கு மட்டும்தானா, குடியில்லாதவர்களுக்கும் வீட்டு மனை இல்லாதவர்களுக்கும் வழங்கி, பட்டா செய்து கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : இந்தச் சட்டத்தை இந்த மன்றம் விரிவாக விவாதித்து இருக்கிறது. குடியிருப்பவர்களுக்கு மனை சொந்தம் இல்லாது இருந்தது. அந்த மனையைச் சொந்தமாக்கும் சட்டம் இந்தச் சட்டம்.

திரு ஆ. பரந்தாமன் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் கூறுகிற நேரத்தில் செங்கற்பட்டு மாவட்ட எல்லை என்று சொன்னார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தில் பல கிராமங்களில் தாழ்த்தப்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு உரிமை இல்லாமல் இருக்கிறது. ஆகவே அந்த உரிமை பாதிக்காத வகையில் அவர்களுக்கு உமை வழங்கப்படுமா ?